முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1625

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.03.2024,** திங்கள்கிழமை

1. தவராஜனே ஆறுமுக அரங்கா
தன்னிகரில்லாத கலியுகத்தின் ஞானகுருவே
அவதாரம் என்சக்தியாக நீஇருக்க
அரங்கனே உந்தனுக்கு சுப்பிரமணியர்யானும் அருளுவேன்
ஞானஅறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் மாசி மாதம் 28ம் நாள், 11.03.2024, திங்கள்கிழமை)

2. ஆசியதும் அரங்கன் ஆற்றல் பெருக வேண்டி
ஆக்கமுடன் அனுதினம் வேலவன் யானும்
பேசி வருகின்றேன் பிரம்ம வேளையில்
அரங்கனோடு ரகசியமாய்
3. பிசகின்றி அரங்கன் சக்தியை
பேருலகம் அடைய வேண்டிதான்
தரணியில் அரங்கன் அவதாரத்தை
தணிகாசலன் யானே வெளிப்படுத்தி
4. வெளிப்படுத்தி உலகோர் அரங்கனை நாடி
விரைந்து ஆசி தீட்சையாக
கரம்பட என் சக்தியை உலகோர் அடைந்து
கருணைபட அவரவரும் ஞானவான்களாகி
5. உறுதி கொண்டு அரங்கன் வழி ஞானம்தேறி
உலகமெல்லாம் ஆறுமுகன் என் வழிபாட்டினாலே
வழிபாட்டினாலே வையகம் மாற்றம் காண
வழங்கி வருகின்றேன் சக்தியை அரங்கனுக்கு
6. அரங்கன் வழி தொடர்பு கொண்ட மக்களுக்கு
அல்லலும் ஆக்கினையும் அவதியும் அகன்று ஓடும்
வரங்களாக அரங்கன் தருகின்ற ஒவ்வொரு தீட்சையிலும்
வல்லமை கொண்டு வேலவன் யானே இருப்பதாலே

7. ஆதலால் இவ்வுலகில் உலகோர்அரங்கன் வழி
அனைத்து தீட்சைகளும் ஏற்று அறத்தின் வழி உதவி நின்றால் போதும்
அவர்கள் எல்லோருமே என்அருள் அனுகூலம் பெற்று
அழியாமை பெறுவது உறுதி உறுதி
ஞானஅறிவுரை ஆசி முற்றே

—சுபம்—